## 13வது ஓய்வுநாள்




# துயரத்தின் மத்தியில் ஆசீர்வாதம்

*ஊழியத்திற்கென படகு வாங்கப்பட்டால் அது பல வகைகளில் உதவியாக இருக்கும்.*

பதிப்பாளர் குறிப்பு: இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி, சாம்பியாவில் உள்ள பேங்வியூலூ நதியில் ஊழியம் செய்வதற்கு ஊழியப்படகு ஒன்றை வாங்குவதற்குப் பயன்படும். இத்திட்டம் பெருந்துயரத்தின் மத்தியில் பிறந்த ஒரு திட்டமாகும்.

இம்மானுவேல் மீவா என்பவர், பேங்வியூலூ நதிமீது பலமுறை படகு ஓட்டியிருக்கிறார். அந்த நதியின் தீவுகளில் வாழ்கிற 1 லட்சத்திற்கும் அதிகமான மக்களை படகு மூலம்தான் அணுகமுடியும். அத்தீவில் உள்ள 18 சபைகளில் உள்ள 1300 அட்வென்ட்டிஸ்ட் விசுவாசிகளை ஊக்கப்படுத்துகிற வகையில் போதகர் இம்மானுவேல் பலமுறை அந் நதியில் படகில் சென்றிருக்கிறார்.

அதில் ஒரு சமயம் அவர்களைச் சந்தித்த அனுபவம் தன்னால் மறக்கவே முடியாதென இம்மானுவேல் சொன்னார். அந்த நதியில் மூழ்கின 14 அட்வென்ட்டிஸ்ட் விசுவாசிகளின் அடக்க ஆராதனையில் கலந்துகொள்ள அந்தத் தீவுகளில் ஒன்றிற்குச் சென்ற அனுபவம்தான் அது.

“14 பேரின் சவப்பெட்டிகள் ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து, துக்கத்தை அடக்கவே முடியவில்லை. சிலுபி என்கிற அந்தத் தீவில் அடக்க ஆராதனைக்காக அரசு அதிகாரிகளும் சபைத்தலைவர்களும் கூடியிருந்தார்கள். நானும் கலந்துகொண்டேன். இது அந்நாட்டில் நடந்த மிகப் பெரிய துக்க நிகழ்ச்சி” என்று சொன்னார்.

அத்துயரச் சம்பவம் வெள்ளிக்

கிழமையில் நடந்தது. இரண்டு தீவுகளுக்கு இடையே சென்று வர சபையானது வாடகைக்கு அமர்த்தியிருந்த அந்தப் படகில் நாற்பத்திரண்டு அட்வென்ட்டிஸ்டுகள் இருந்தார்கள். வெவ்வேறு இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்வதற்கு அந்த அட்வென்ட்டிஸ்டுகள் திட்டமிட்டிருந்தார்கள். அங்கு நடைபெறவிருந்த பாத்ஃபைண்டர் முகாமில் கலந்துகொள்ள மக்களை அழைக்கவும் திட்டமிட்டிருந்தார்கள். அந்தப் பெரிய நதிக்கு குறுக்கே பலத்த காற்று வீசியது; அந்த நதியின் பரப்பளவு அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தின் பரப்பளவு அளவுக்கு இருக்கும். திடீரென ஒரு பெரிய அலை வந்து, படகில் மோதி, படகைக் கவிழ்த்தது.

அருகிலிருந்த படகில் இருந்தவர்கள் தண்ணீரில் மூழ்கி 28 நபர்களைக் காப்பாற்றினார்கள். ஆனால் 2 வயது குழந்தை உட்பட 14 பேர் ஆற்றில் மூழ்கினார்கள்.

அந்த விபத்துகுறித்த செய்தி சாம்பியா முழுவதும் அதிர்ச்சி அலைபோலப் பரவியது. அதன் பிறகு, படகுபாதுகாப்பு விதிகள் வேண்டும் என்றும், பொதுப் போக்குவரத்து தேவை என்றும் மக்கள் பேச ஆரம்பித்தார்கள். அரசாங்க கட்டுப்பாட்டின்கீழ் அந்த நதியில் ஒரே ஒரு பெரிய படகுதான் இயக்கப்பட்டது, ஆனால் வாரத்திற்கு ஒருமுறைதான் அந்தப் படகு சேவை உண்டு. மற்ற நாட்களில் அந்த நதியைக் கடக்கவேண்டுமானால் வாடகை படகில்தான் செல்லவேண்டும்.



## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் சாம்பியாவைக் காட்டுங்கள். பிறகு, அந்நாட்டின் வடபகுதியில் உள்ள பேங்வியூலூ நதியைக் காட்டுங்கள்.
- பேங்வியூலூ நதிக்கு ‘ஆகாயமும் தண்ணீரும் சந்திக்கிற இடம்’ என்று அர்த்தம்.
- இம்மானுவேலின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/Emmanuel-SID.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/sid-2025.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் “ஐ வில் கோ” என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, ‘தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்’. ‘குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்’.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, ‘குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்’.
- குறிக்கோள் எண். 7, “இளைஞர்கள் ஆண்டவருக்கு முதலிடம் கொடுப்பதற்கும், வேதாகம உலகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவதற்கும் உதவவேண்டும்.”

அடக்க ஆராதனையின்போது, அதுபோன்ற விபத்த இனி நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைஎடுக்குமாறுஅட்வென்ட்டிஸ்ட் தலைவர்களிடம் அரசு அதிகாரி ஒருவர் கேட்டுக்கொண்டார். சபை சார்பாக ஒரு படகை ஏற்பாடு செய்யவும் கூறினார். அதன்மூலம், ஏற்கனவே இருந்துவரும் அரசு படகு சேவைக்கு அது உதவியாக இருக்குமெனத் தெரிவித்தார்.

அந்த நதி அமைந்துள்ள வட சாம்பியா யூனியன் கான்ஃபரன்ஸின் தலைவர்கள் அதை சவாலாக ஏற்றுக்கொண்டார்கள்.

"படகு போக்குவரத்திற்கு மிகச்சிறப்பான ஏற்பாட்டைச் செய்வது வட சாம்பியா யூனியனின் பணி" என்று சொன்னார் இம்மானுவேல்; இவர் அந்த யூனியனின் செயல் அதிகாரியாக இருக்கிறார்.

ஆனால் ஒரு படகின் விலை 1 லட்சம் டாலருக்கும் அதிகம் இருக்கும்; அந்த யூனியனால் அவ்வளவு பணம் செலவிடமுடியாது. அதனால் 2025ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதியை அதற்காகக் கொடுத்து உதவும்படி அந்த யூனியன் கேட்டுக்கொண்டது. படகு வாங்குவதற்கு அந்தக் காணிக்கையைப் பயன்படுத்துவதற்கு சபையின் அனைத்து மட்ட அளவிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

ஊழியத்திற்கென படகு வாங்கப்பட்டால் அது பல வகைகளில் உதவியாக இருக்குமென இம்மானுவேல் மகிழ்ச்சியாகக் கூறுகிறார்.

## சில தகவல்கள்

- விக்டோரியா நீர்வீழ்ச்சி உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சிகளில் ஒன்று; அது, ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகவும் உள்ளது.
- உலகின் மிக அரிய பறவையினங்களில் ஒன்றான ஷூபில் அலகு நாரை சாம்பியாவில் மட்டுமே காணப்படுகிறது. அவை சுமார் 5 அடி உயரம் (1.5 மீட்டர்) வளரக்கூடியவை; குட்டி முதலைகளை உண்பவை.

## குறிப்புகள்

- ஊழிய அறிக்கையைச் சொல்லுபவர்கள் மனப்பாடம் செய்து சொல்லக் கூடாது. முன்னரே சம்பவத்தை நன்றாக வாசித்து அறிந்திருக்கவேண்டும். அல்லது, சிறுவர்களும் பெரியவர்களும் அந்தச் சம்பவங்களை நடித்துக் காட்டலாம்.
- உலகம் முழுவதிலும் தேவனுடைய வார்த்தையைப் பரப்ப உதவுகிற ஒரு பரிசாக நம் காணிக்கை இருப்பதை அனைவருக்கும் ஞாபகப்படுத்துங்கள். பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் நான்கில் ஒரு பகுதி தென் ஆப்பிரிக்கா—இந்தியப் பெருங்கடல் டிவிஷனில் ஏழு திட்டங்களுக்காகப் பயன்படப் போவதையும் குறிப்பிடுங்கள். அத்திட்டங்கள்பற்றி 46ம் பக்கத்தில் வாசியுங்கள்.
- ஊழிய அறிக்கையைச் சொல்வதற்கு முன்னரும் பின்னரும் வரைபடத்தைக் காண்பித்துப் பேசுங்கள். தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனில், இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் பயன்படப்போகிற சாம்பியா, தென் ஆப்பிக்கா நாடுகளைக் காட்டுங்கள்.

சுமார் 60 பயணிகள் பயணிக்கக்கூடிய அந்தப் படகை அரசு படகு இயங்காத மற்ற நாட்களில் இயக்கமுடியும். படகு பராமரிப்புக்குச் செலவாகிற பணத்தை மட்டும் கட்டணமாகக் கட்டி பயணிகள் பயணிக்கமுடியும்.

அரசு படகில் விளம்பரங்களை ஒளிபரப்புகிற காணொளி திரைகள் உண்டு. அட்வென்ட்டிஸ்ட் படகில் ஹோப் நிலையத்தின் நிகழ்ச்சிகளைப் பார்க்கிற வசதியுடன் வெண்திரை நிறுவப்படும்.

“அந்தப் படகு மக்களின் பயணத்திற்காக மட்டும் பயன்படாது; மாறாக, அவர்களுக்குப் பிரசங்கிக்கவும் பயன்படும்” என்று இம்மானுவேல் சொன்னார்.

உலகம் முழுவதிலுமுள்ள சபை அங்கத்தினர்கள் 13ம் வாரக் காணிக்கையை உதாரத்துவமாகக் கொடுக்கவும், அதன்மூலம் அத்திட்டத்திற்கு உதவவும் கேட்டுக்கொண்டார்.

“பேங்வியூலூ நதியில் ஊழியம் செய்வதன்மூலம், மக்களை பத்திரமாக கரைசேர்ப்பதோடுகூட, அவர்களை பத்திரமாக தேவனுடைய ராஜ்யத்திற்கும் கொண்டு சேர்க்க முடியும். இந்த ஊழியத்தின் நோக்கம் ஒரு பெருந்துயரத்தை ஆசீர்வாதமாக மாற்றுவதுதான்” என்று சொன்னார்.

---

## இந்தக் காலாண்டுத் திட்டங்கள்

**இந்தக் காலாண்டின் பதின்மூன்றாவது வார ஓய்வுநாள் காணிக்கை தென் ஆப்பிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனில் பின்வரும் திட்டங்களுக்காகப் பயன்படும்:**

- வடசாம்பியாவில் புதிதாக ஒரு மேல்நிலைப்பள்ளி.
- சாம்பியாவின் கலபோவில் உள்ள யூகா அட்வென்ட்டிஸ்ட் மருத்துவமனையில் பணியாளர்களுக்கு வீடு.
- சாம்பியாவில் உள்ள பேங்வியீலூ நதியில் ஊழியப் படகு.
- சாம்பியாவின் சிபோம்போவில் உள்ள சிடாண்டா லூமாம்பா அட்வென்ட்டிஸ்ட் மருத்துவமனையில் சமையலறை, துணி துவையல் அறை.
- தென் ஆப்ரிக்காவின் உம்ஹ்லங்காவில் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு செல்வாக்கு மையம்.
- சிறுவர் திட்டங்கள்: தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனில் ஆவிக்குரியகனி குறித்த பொம்மைப்படங்கள் தயாரிப்பது, அட்வென்சரர்ஸ் வேதாகமங்களை விநியோகிப்பது.